33 | T | I

**க.பொ.த உயர்தர 2021 மாணவர்களுக்கான**
**2ம் தவணைக்கான கணக்கீட்டுப்பாட முன்னோடிப் மாதிரி வினா**
**வயாவிளான் மத்திய கல்லூரி – வயாவிளான்**

BY- VS. THIRUKUMARAN B.COM (ACC) SPC. PGDE

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2020 மார்ச்
General Certificate of Education (Adv.Level) Examination, march 2020

# Accounting I ,II
# கணக்கீடு I ,II

A/L 2021
தரம் 12

**09.03.2020**

3.00 மணி

பகுதி I

Q 1) நிதிக் கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது மிக சரியானது.

A இது அக்கறையுடைய தரப்பினருக்கு தீர்மானம் எடுக்க தேவையான தகவல் வழங்குகின்றது.
B இது வரலாற்றுத்தகவல்களையும் எதிர்வுகூறப்படும் தகவல்களையும் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுகின்றது.
C இது நிதியாண்டுக்கு ஒருதடவை தயாரிக்கப்படும்
D இது பொதுநோக்குடைய நிதிக்கூற்றாக கொள்ளப்படும்.

1) ABC 2) ABD 3) ACD 4) AC 5) ABCD

➢ குகன் நிறுவனத்தின் 2020 ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கான தகவல்கள் வருமாறு

1.1.2020 இல் சொத்து ரூ 400000 ரூ பொறுப்பு 250000 காணப்பட்டது
8.1.2020 ரூ 15000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
15.1.2020 ரூ 8000 பண்டங்கள் ரூ 15000 கடனுக்கு விற்கப்பட்டது. ( வியாபாரக் கழிவு 20%)
25.1.2020 ரூ கடன்பட்டேரிடமிருந்து 1000 கழிவுதள்ளி ரூ 9000 பெறப்பட்டது.
29.1.2020 கடனபட்டோனால் திருப்பியது ரூ 5000 இதன்கிரயம் ரூ 4000
02.02.2020 கடன்கொடுநருக்கு ரூ 2000 கழிவுதள்ளி ரூ 8000 செலுத்தப்பட்டது.
05.02.2020 பற்றிய காசு 4000

**மேற்படி தரவுகளை அடிப்படையாககொண்டு 2ம், 3ம், 4ம் வினாக்களுக்கு விடை தருக**

Q 2) 31.1.2020 இல் இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு யாது ?

| | சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | 417000 | 152000 | 265000 |
| 2. | 405000 | 150000 | 255000 |
| 3. | 415000 | 155000 | 260000 |
| 4. | 415000 | 150000 | 265000 |
| 5. | 410000 | 150000 | 260000 |

Q 3) ஜனவரி மாத லாபமும், 05.02.2020 இல் உரிமையாண்மை யாது?

1) ரூ 2000, ரூ 156000 2) ரூ 4000, ரூ 155000 3) ரூ 2000, ரூ 152000
4) ரூ 3000, ரூ 150000 5) ரூ 2000 ரூ 150000

Q4) நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் கணக்கீட்டு செய்முறைகள் வருமாறு

**A** – வருமானக்கூற்று
**B** – வெளித்திரும்பல் நாளேடு
**C** – வரவுத்தாள்
**D** – வெளித்திரும்பல்
**E** – பரீட்சைமீதி

சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக. (……….)

1) **CDBEA** 2) **DBCEA** 3) **CEADB** 4) **DCBEA** 5) **CBDEA**

Q5) கபிலன் நிறுவனம் அபிசன் நிறுவனத்திற்கு ரூ 20000 இற்கு கடனுக்குவிற்கப்பட்ட பண்டங்கள் ரூ 5000 பண்டங்கள் பழுதுகாரனதாக அபிசன் கபிலனுக்கு திருப்பப்பட்டதுடன் மிகுதிக்கு காசோலை பெறப்பட்டது. இதனை அபிசன் நிறுவனத்தில் பிரதிபலிக்கும் மூலஆவணங்களின் தொடர் எது.

1. பற்றுச்சீட்டு வரவுத்தாள் காசோலைஅடியிதழ்
2. பற்றுச்சீட்டு செலவுத்தாள் காசோலைஅடியிதழ்
3. பட்டியல் செலவுத்தாள் பற்றுச்சீட்டு
4. விற்பனைபட்டியல் வரவுத்தாள் காசோலைஅடியிதழ்
5. பட்டியல் வரவுத்தாள் சைசாத்து

➢ வரையறுத்த திலக் கம்பனியின் கடன்பட்டோர் பட்டியல் மீதி ரூ 64000 கட்டுப்பாட்டுக் கணக்கு உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.

- கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கம் ரூ 1000 மிகையாக கூட்டப்பட்டது.
- எதிர்மாற்றல் ரூ 4000 கடன்பட்டோர் பேரேட்டில் ரூ 400 என பதியப்பட்டது.
- விற்பனைத் திரும்பல் 5000 விற்பனைத்திரும்பல் நாளேட்டில் ரூ 500 என பதியப்பட்டது.
- கடன்பட்டோர்பேரேட்டில் காணப்பட்ட செலவுமீதி ரூ 2000 பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

**மேற்படி தரவுகளை அடிப்படையாககொண்டு 6ம், 7ம், வினாக்களுக்கு விடை தருக**

Q6) திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

1) ரூ 50900 2) ரூ 46400 3) ரூ 49900 4) ரூ 58400 5) 53900

Q7) திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு யாது?

1) ரூ 57400 2) ரூ 52900 3) ரூ 47400 4) ரூ 58400 5) 51900

Q8) வணிகத்தில் அக்கறையுடைய தரப்பாக பின்வருவோர் காணப்படுகின்றனர்
(……)

A உரிமையாளர்
B முகாமையாளர்
C வழங்குநர்
D ஊழியர்

இவர்கள் பின்வரும் நோக்கங்களுக்காக அக்கறைபடுகின்றனர்

1. தொழில் பாதுகாப்பும் உறுதிப்பாடும்
2. முதலுக்கான பாதுகாப்பு
3. பொருட்களுக்கான சந்தைவாய்ப்பு
4. வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி வணிக நோக்கத்தை அடைதல்

மேற்குறிப்பிட் நோக்கங்களை அடையும் தரப்பினரை வரிசைப்படுத்துக

1) BCAD 2) CDAB 3) DACB 4) DBAC 5) DCAB

Q9) பின்வரும் கூற்றுக்களில் **பிழையான** கூற்றை தெரிவு செய்க.

A விற்பனை மீதான VAT ஒரு சென்மதி ஆகும்.
B பொறிக்கடன்கொடுநர் கணக்கு கடன்கொடுடுநர் பேரேட்டில் பேனப்படும்
C விற்பனைத்திரும்பல் விற்பனைக்கணக்கில் வரவிடப்படின் இப் பிழையால் மொத்தலாபம் குறையும்
D கொள்வனவு மிதான VAT ஒரு செலவினமாகும்

1) BC 2) ABCD 3) AB மட்டும் 4) D மட்டும் 5) BCD

- 1.1.2020 இல் ஆரம்பித்த மதன் கம்பனியின் ஜனவரி மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாளேடடின் மொத்தம் ரூ 162000 காசுக்கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் ரூ 112000 ஜனவரி மாத வங்கிக்கூறில் காணப்பட்ட நேரடிவைப்பு ரூ 8000 வங்கிக்கட்டனம் ரூ 2000 நிலையியற்கட்டளை கொடுப்பனவு ரூ 3000 என்பன பெறுவனவு கொடுப்பனவு நாளேடுகளில் பாதியப்படவில்லை. 31.1 இல் காணப்படும் மாற்றப்படாத காசோலை ரூ 12000 வசூழிக்கப்படாத காசோலை ரூ 5000 ஆகவுள்ளது.

### 10ம் 11ம் வினாக்களுக்கு விடை தருக

Q10) 31.1.2020 இல் காணப்படும் வங்கிக்கூற்றுப்படி மீதி யாது?
1) ரூ 50000 2) 60000 3) 40000 4) 30000 5) 80000

Q11) மேற்படி தகவல்களின்படி பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானது?

A ஜனவரி மாத மொத்த காசுப் பெறுவனவு ரூ 170000
B ஜனவரி மாத மொத்த காசுக்கொடுப்பனவு ரூ 117000
C ஜனவரி மாத வங்கிக் கூற்றின் மொத்த கழிப்பனவுகள் ரூ 105000
D ஜனவரி மாத வங்கிக் கூற்றின் மொத்த சேர்ப்பனவுகள் ரூ 165000

1. AB 2. AC 3. ABCD 4. BCD 5. ஏல்லாம் பிழையானது

**Q12**) சாள்ஸ் என்பவர் 1.1.2020 இல் மூலதனமாக 500000 முதலீடு செய்து வியாபாரமொன்றை ஆரம்பித்தார் இவர் இத்தொகையில் 80% பொருட்களை கொள்வனவு செய்ய செலவிட்டார். இப் பொருட்கள் முழுவதும் கிரயத்தில் 40% கூட்டி விற்பனை செய்தார் இவ் வியாபாரத்தின் 31.1.2020 இல் தேறியசொத்து ரூ 620000 ஆகும் இம் மாதத்திற்கான பற்றுக்கள் மேலதிக மூலதனம் முறையே ரூ 8000, ரூ 15000 ஆகும். 31.1.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறியலாபம் , செயற்பட்டுச் செலவினம்.

| | இலாபம் | செயற்பாட்டுச் செலவு |
|---|---|---|
| 1) | 113000 | 54000 |
| 2) | 127000 | 33000 |
| 3) | 113000 | 47000 |
| 4) | 207000 | 47000 |
| 5) | 113000 | 57000 |

Q13) காசுக்கட்டுப்பாட்டு மீதியை விட வங்கிக்கூற்று மீதி அதிகமாக காணப்பட்டது இதற்கு வகை செய்யும் சரியான நிகழ்வுகள் எவை?

A வங்கி அறவீடுகள்
B மாற்றப்படாத காசோலை
C வசூழிக்கப்படாத காசோலை
D நேரடிவைப்பு

2) AC 2) BC 3) Aமட்டும் 4) C மட்டும் 5) BD

♣ யமுனா பொதுக்கம்பனியன் நிறுவனத்தின் 2019 மாாச் மாதத்தில் இடம்பெற்ற பிழைகள் வருமாறு

A – விற்பனை ரூ 5000 விற்பனை திரும்பல் நாளேட்டில் பதியப்பட்டது.

B – காசு விற்பனை ரூ 4000 கடன்பட்டோரிடம் பெற்ற காசாக கருதி பதிவிடப்பட்டது.

C – 1.3 இல் இடம்பெற்ற அலுவலக உபகரணகொள்வனவு ரூ 10000 அலுவலகச் செலவுக் கணக்கில் ரூ 1000 எனபதியப்பட்டது. அலுவலக உபகரணத்திற்கு 12% தேய்விடப்பட்டது.

**14ம் 15ம் வினாக்களுக்கு விடை தருக**

Q14) மேற்படி பிழையால் தொங்கல் கணக்கு மீதியும் மார்ச் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கமும் யாது?

| | தொங்கல்கணக்கு | இலாபம் |
|---|---|---|
| 1) | 2000 வரவு | ரூ 10000 குறையும் |
| 2) | 1000 செலவு | ரூ 15000 அதிகரிக்கும் |
| 3) | 3000 வரவு | ரூ 14000 குறையும் |
| 4) | 9000 செலவு | ரூ 14900 அதிகரிக்கும் |
| 5) | 9000 வரவு | ரூ 14900 குறையும் |

Q15) மேற்படி பிழையை திருத்துவதால் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு மீதியில் ஏற்படும் தாக்கம் யாது?

கட்டுபாட்டுகணக்கு

1) 14000 குறையும்
2) 14000 அதிகரிக்கும்
3) 24000 குறையும்
4) 30000 அதிகரிக்கும்
5) 18000 அதிகரிக்கும்

## 16-25 வரையான வினாக்களுக்கு விடை தருக.

Q16) பின்வரும் உருப்படிகள் பொருத்தமான நிதிக்கூற்றின் மூலத்திலும் கூறுகளிலும் பட்டியலிடுக.

| உருப்படிகள் | மூலம் | கூறுகள் |
|---|---|---|
| A பெறுமானத்தேய்வு | ……………………….. | …………………………… |
| B சென்மதிச் செலவு | ………………………. | ……………………………. |
| C உட்திரும்பல் | ………………………… | ………………………….. |
| D சில்லறைக்காசு | ………………………. | ……………………………. |

Q17) ரூ 300000 பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களுக்கு 20% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் 2/3 பகுதி 10% கழிவுடன் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?

கொள்வனவுக் கணக்கு ரூ ……………………………………………………...

பெற்ற காசுக் கழிவு ரூ …………………………………………………………….

கடன்கொடுநர் கணக்கின் இறுதிமீதி ரூ ………………………………………………..

செலுத்திய காசு ரூ ……………………………..

Q18) ரூ 200,000 கிரயமானபொருள் ரூ300 000 பட்டியல் விலையில் 20% வியாபாரக் கழிவில் கடனுக்கு விற்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட விளம்பரச் செலவு ரூ 6000 கடன்பட்டோரிடமிருந்து 2/3 பகுதி 10% கழிவு தள்ளி காசு பெறப்பட்டது. இதன்போது ஏற்பட்ட பின்வரும் மீதிகள் யாது?

மொத்தச் செலவு ……………… மொத்த வருமானம் ……………… இலாபம் …………………

Q19) பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, என்பவற்றின் மீது ஏற்படுத்தும் **தேறிய** தாக்கத்தினை அதிகரிப்பு (**I**) குறைவு (D) மாற்றமில்லை (**NC**) என்பவற்றின் மூலம் காட்டுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்து | பொறுப்பு | உரிமை |
|---|---|---|---|
| A- கடன்பட்டோரிடம் ரூ 1000 கழிவு தள்ளி ரூ 4000 காசு பெறப்பட்டது | …………….. | ………… | ………… |
| B- ரூ 12000 பண்டங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. | ……………… | ………….. | ……………. |
| C- ரூ 10000 பண்டங்கள் ரூ 15000 கடனுக்கு விற்கப்பட்டது. | ……………… | ………….. | …………. |

Q20) 2019 ஜனவரி மாத ஊழியருக்கு செலுத்தப்பட்ட தேறியசம்பளம் ரூ 22500 **EPF** க்கு ஊழியர் 10% தொழில்கொள்வோன் 15 % பங்களிப்பு செய்கின்றனர் இப்பங்களிப்புக்கள் அடுத்த மாதமே மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகின்றது. இந்த நடவடிக்கை சொத்து, பொறுப்பு உரிமை என்பவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை பெறுமதியுடன் எடுத்துக்காட்டுக.

…………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………..

Q21) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியசொத்து ரூ 43000 குறைவடைந்தது மாதாந்த பற்று ரூ 500, நிதியாண்டுக்கான மேலதிக மூலதனம் ரூ 20000 எனின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறிய இலாபம் அல்லது நட்டம் யாது?

…………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

Q22) சாகிரு நிறுனத்தின் 2019 ஜனவரி திருத்திய காசுக்கட்டுப்பாட்டு மீதி ரூ 42000 வங்கிக்கூற்றுப்படி வங்கி மீதி ரூ 54000 ஜனவரி மாத மாற்றப்படாத காசோலை ? வசூழிக்கப்படாத காசோலை ரூ 8000 நேரடிவைப்பு ரூ 6000 வசூழித்த பங்குலாபம் ரூ 3000 வங்கிக்கட்டனம் ரூ 2000

அ) ஜனவரி மாற்றப்படாத காசோலை யாது?

……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….

ஆ) திருத்தமுன் காசுக்கட்டுப்பாட்டு மிதி யாது?

………………………………………………………………………………………………

Q23) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

**A** – கடன்பட்டோரை சொத்தாகவும் கடன்கொடுநரை பொறுப்பாகவும் இனம்கானல்

**B**- இருப்புக்களின் கிரயத்தைவிட கைத்தேறத்தக்கபெறுமதி குறைவாகவுள்போது குறைந்த பெறுமதியில் இருப்பு மதிப்பிடல்

**C** – பெறுமானத்தேய்வு வருமானக்கூற்றில் செலவாக இனம்கானல்.

**D** – வருமானக்கூற்றில் இருப்பானது கழித்துக்காட்டப்படல்

| விடயம் | எண்ணன்கரு |
|---|---|
| A | ............................................ |
| B | ............................................ |
| C | ............................................ |
| D | ............................................ |

Q24) வரையறுத்த சிம்கோ கம்பனியில் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுடன் தொடர்புடைய கடன்கொடுநர் தொடர்பான பிழைதவறுகள் வருமாறு. இவற்றுக்கான சீராக்கத்தை பெறுமதிகளுடன் கட்டுப்பாட்டு கணக்கிலும் பட்டியலிலும் திருத்தம் செய்து காட்டுக.

| பிழை தவறுகள் | கட்டுப்பாட்டுக் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம் | பட்டியலில் செய்யவேண்டிய திருத்தம் |
|---|---|---|
| கொள்வனவுத் திரும்பல் ரூ 5000 கொள்வனவு நாளேட்டில் 500 என பதியப்பட்டது | ...................................... | ...................................... |
| மதிப்பிழந்த காசோலை ரூ 2000 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 200 வரவிடப்பட்டது | .................................. | ...................................... |

Q25) வரையறுத்த சீனு கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பரீட்சை மீதி சமப்படவில்லை. இவ்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட வருமானக்கூற்று ரூ 52000 தேறியலாபமாக காட்டியது. பின்னர் பின்வரும் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

- பேரேட்டில் காணப்பட்ட பெற்ற வட்டி ரூ 5000 பரீட்சை மீதிக்கு எடுத்துவரப்படவில்லை
- விற்பனைத் திரும்பல் ரூ 3000 விற்பனை நாளேட்டில் பதிவிடப்பட்டது.
- ஆரம்ப இருப்பு ரூ 1000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டது.

அ) 31.3.2019 இல் பரீட்சை மீதியில் தோன்றக்கூடிய தொங்கல் கணக்கு மிதி யாது?

..............................................................................................

ஆ) பிழை தவறுகள் சீராக்கப்பட்டபின் சரியான தேறியலாபம் யாது?

............................................................................................

பகுதி II

**1ம் 2ம் வினா உட்பட மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக**

**வினா இல 01**

நிமலன் நிறுவனத்தின் ஏடுகளில் 31.3.2019 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காப்புறுதி | 3200 | |
| வங்கிக்கடன்வட்டி | 2300 | |
| காசுக்கட்டுப்பாடு | 273400 | |
| பொறி பழுதுபார்த்தல்திருத்தம் | 3600 | |
| விற்பனைத்தரகு | 2400 | |
| விளம்பரம் | 3400 | |
| வங்கிக் கட்டனம் | 1200 | |
| சம்பளம் (தேறியது) | 7200 | |
| கொள்வனவு ( 15 % VAT உட்பட) | 184000 | |
| விற்பனை ( 15 % VAT உட்பட) | | 345000 |
| பிரயானம் | 1500 | |
| சுமையிறக்கல் | 2100 | |
| மூலதனம் | | 550000 |
| பெற்றகழிவு | | 3200 |
| கட்டிடமும் 1.4.2018 இல் திரண்ட பெ.தே | 250000 | 54000 |
| தளபாடபொருத்தும் 1.4.2018 இல் திரண்ட பெ.தே | 150000 | 36500 |
| பொறிஇயந்திரம் (1.4.2018 இல் திரண்ட பெ.தே 42000 கழித்து) | 78000 | |
| 10% வங்கி நிலையான வைப்பு (1.10.2018 வைப்பிலிடப்பட்டது) | 50000 | |
| 15% வங்கிக்கடன் (30/6/2018 இல் பெறப்பட்டது) | | 80000 |
| 1/4/2018 இல் இருப்பு | 38100 | |
| தொலைபேசிக்கட்டனம் | 4800 | |
| வருமதியாளர் சென்மதியாளர் | 56500 | 42000 |
| அறவிடமுடியாக்கடனும் 1.4.2018 இல் ஐயக்கடன் ஒதுக்கீடும் | 1500 | 2500 |
| | **1113200** | **1113200** |

**மேலதிக தகவல்**

- ♣ 31.3.2019 இல் உள்ளபடியான இருப்பின் கிரயம் ரூபா 42000 இதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ 40500 ஆகும்.
- ♣ தொலைபேசிக்கட்டனத்தில் ரூபா 1200 வும், பிரயானத்தில் ரூபா 500ம் சென்மதியாகவுள்ளது
- ♣ காப்புறுதியல் 1200 அடுத்தாண்டுக்குரியது.
- ♣ கட்டிடங்களுக்கு கிரயத்தில் 4% மும், பொறிக்கு முன்கொண்டுவரும் தொகையில் 10% தளபாடத்திற்கு நேர்கோட்டுமுறையில் 8% தேய்விடுக.
- ♣ அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 1500 ஐ பதிவளிக்குக. எஞ்சிய கடன்பட்டோரில் 8 % க்கு சமனாக சீராக்குக.
- ♣ உடமையாளர் வாரமொருமுறை ரூபா 100 கிரயமான பண்டங்களை சொந்ததேவைக்கு பற்றினார். இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
- ♣ ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 6000 கிரயமான பண்டங்கள் தீயினால் அழிக்கப்பட்டது. இவற்றில் 75% ஐ காப்புறுதிக் கம்பனி நட்ட ஈடாக தரமுன்வந்தது. இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
- ♣ ஊழியர் சேமலாபநிதிக்கு (EPF) 10% தொழில்கொள்வோன் 15% பங்களிப்பு செய்கின்றனர். இவ்வாண்டுக்கான பங்களப்பிற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்
- ♣ நிறுவனம் தமது ொள்வனவுகள், விற்பனைகள் மீது 15% பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும்.

தயாரிக்குக

1) 31/3/2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்று
2) 31/3/2019 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

(30 புள்ளிகள்)

**வினா இல 02**

ரமணன் என்பவர் 1.4.2018 இல் வியாபாரமொன்றை தொடங்கினார் 31.3.2019 இல் உள்ளவாறான கமல் வியாபாரத்தின் வரைபு நிதிக்கூற்றுக்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு.

| | ரூ 000 |
|---|---|
| ஆதனம்பொறி உபகரணம் - கிரயத்தில்…………………….. | 8000 |
| இருப்பு (கணக்கீட்டு பதிவுகளின்படி) ……………………………. | 500 |
| வியாபாரவருமதி ………………………………………………. | 2500 |
| முற்செலுத்திய வாடகை ……………………………………. | 200 |
| காசுமீதி ………………………………………………………. | 1800 |
| வியாபாரகொடுக்குமதி ………………………………………. | 2100 |
| அட்டுறுச் செலவு …………………………………………… | 250 |
| முற்பனமாகப் பெற்றவை ………………………………… | 150 |
| 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் ……….. | 2500 |
| 1.4.2018 இல் மூலதனம் …………………………………….. | 8000 |

வியாபாரத்தின் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கினுடாக செய்யப்படுகின்றன.

31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

1. 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுமானத்தேய்வு ரூ 400000
2. 2019 மார்ச் மாதத்திற்கான காட்சியறை வாடகை ரூ 200000 ஆனது முற்செலுத்திய வாடகைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3 2019 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டனம் ரூ150000 ஆனது 31.3.2019 செலுத்தப்படவோ, கணக்கில் பதியப்படவோ இல்லை.
4 30.3.2019 இல் ரூ 200000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டபொருட்கள் கணக்குப்புத்தகங்களில் பதியப்படவில்லை
5 30.3.2019 இல் ரூ 240000 கிரயமானபொருட்கள் ரூ 420000 காசுக்கு விற்பனைசெய்யப்பட்டமை தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் பதியப்படவில்லை.
6 இவ்வருடத்தில் ரூ 60000 கிரயமான இருப்பு உருப்படிகள் அழிவடைந்துள்ளதுடன் இவ்வுருப்படிகள் விற்பனை செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை எனினும் இவ்வுருப்படிகள் 31.3.2019 இல் உள்ள இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவற்றின் தேறக்கூடிய பெறுமதி ஒன்றும் காணப்படவில்லை.
7. வாடிக்கையாளர் ஒருவர் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கட்டளை ஒன்றை முன்வைத்துள்ளார். இப்பொருட்களின் விற்பனை விலை ரூ 150000 இத்தொகை நடைமுறைவருடத்தில் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட இத்தொகையானது முற்பனமாக பெற்றவை கணக்கில் பதியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவற்றில் 2/3 பகுதி மட்டுமே 31.3.2019 வரை வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன். அவற்றின் கிரயம் ரூ 60000 ஆகும். மேலும் இவ்விநியோகம் தொடர்பில் எதுவிதபதிவுகளும் செய்யப்படவில்லை. மிகுதிப்பொருட்கள் அடுத்தவருடத்தில் வநியோகிக்கப்படும்.

8. 28.3.2019 இல் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற ரூ 30000 காசோலையொன்று 31.3.2019 இல் வங்கியால் மறுக்கப்பட்டமையை 03.4.2019 இல் பெறப்பட்ட வங்கிக்கூற்று வெளிப்படுத்தியுள்ளது. இதுபற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.

9. மேலும் 31.3.2019 இல் வங்கியில் கடன்பட்டோர் ஒருவரினால் நேரடியாக ரூ 40000 காசோலை ஒன்று வைப்புச் செய்யப்பட்டதையும். இத்தொகையானது வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது மீளப்பெறமுடியாத தொகையாக பதியப்பட்டது.
10. வியாபாரத்தினால் உடமையாளரின் பிள்ளைக்கு பரீட்சைக்கட்டனமாக செலுத்திய ரூ 2000 ஐ வங்கிக்கூற்று வெளிப்படுத்துகின்றது.

வேண்டப்படுவது

1. ஆரம்ப, இறுதி மீதிகள் உட்பட கீழ்வரும் சமன்பாட்டில் பதிவுசெய்து காட்டுக
   ஆ.பொ.உ + இருப்பு + வியாபார வருமதி + ஏனைய வருமதி + காசு = மூலதனம் + நிறுத்திவைத்த இலாபம் + வியாபார சென்மதி + ஏனைய சென்மதி
2. 31.3.2019 இல் முடிவடைந்த காலத்திற்கான திருத்தியலாபம்
3. 2, 3, 6, 9, 10 ஆகியவற்றை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு

(30 புள்ளிகள்)

**வினா இல 03**

அ) வரையறுத்த சிரான் பொதுக் கம்பனியின் 1.3.2019 இல் உள்ள கடன்பட்டோன் பேரேட்டுட்டு மீதிகளின் மொத்தம்.

| **கடன்பட்டோர்** | 1.3.2019 இல் மீதி 000 |
|---|---|
| சயந்தன் | 300 |
| சேயோன் | 200 |
| ராஜன் | 100 |
| மொத்தம் | **600** |

கம்பனியின் மூலப்பதிவேட்டிலிருந்து 2019 மார்ச் மாதத்திற்கான கடன்விற்பனைகளும் அவைதொடர்பான கொடுக்கல்வாங்கலின் விபரம் வருமாறு. எல்லாம் 000

| கடன்பட்டோர் | விற்பனை | விற்.திரும்பல் | பெற்ற காசு | அனுமதித்த கழிவு | அறவிடமுடியாகடன் |
|---|---|---|---|---|---|
| சயந்தன் | 400 | 50 | 250 | 50 | - |
| சேயோன் | 500 | 100 | 320 | 80 | - |
| ராஜன் | 600 | 50 | 650 | 50 | - |
| காந்தி | 1000 | - | 600 | - | 100 |
| **மொத்தம்** | **2500** | **200** | **1820** | **180** | **100** |

1.3.2019 இல் கடன்பட்டோன் ரேரேட்டு மீதிகளின் மொத்தம் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியது எனினும் இவ் இரண்டு மீதிகளும் 31.3.2019 இல் இணங்கவில்லை. பரிசீலினையின்போது கட்டுப்பாட்டுக் கணக்கு சரியாகவுள்ளது எனவும் கடன்பட்டோன் பேரேட்டில் பின்வரும் பிழைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. சேயோன் திருப்பப்பட்ட சரக்குகள் அவர் கணக்கில் பதியப்படவில்லை.
2. ராஜன் விற்பனை அவன் கணக்கில் தவறாக 900 000 என பதியப்பட்டது
3. காந்தி கணக்கில் அறவிடமுடியாக்கடன் பதியப்படவில்லை.
4. கடன்பட்டோர் பேரேட்டுப்பட்டியல் ரூ 100000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டது.

**வேண்டப்படுவது:**

1. **மார்ச் மாத கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு**
2. **மேலுள்ள பிழைகள் திருத்தமுன் 31.3.2019 இல் உள்ள கடன்பட்டோன் பேரேட்டு மீதிகளின் மொத்தம்.**

**( 15 புள்ளிகள்)**

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு வடை தருக**

**1.** வரலாற்றுக் கிரய எண்ணக்கரு மீறப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

…………………………………………………………………………………………

2) ஐயக்கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கருக்கள் இரண்டு தருக.

……………………………………………………………………………………………..

3) காலத்திற்கு காலம் இடம்பெறும் பணவீக்க நிலைமைகள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது கவனத்தில் கொள்ளத் தேவையில்லை என வலியுறுத்தும் எண்ணக்கரு எது?

…………………………………………………………………………………………

4) பெறுமானத்தேய்வுடன் தொடர்புபடும் எண்ணக்கருக்கள் இரண்டு தருக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

5) கணக்கீட்டுச் சட்டகத்தில் வலியுறுத்தப்படும் அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கரு எது?

……………………………………………………………………………………………..

**வினா இல 04**
வரையறுத்த தீபன் கம்பனியின் பரீட்சை மிதி *31/3/2019* இல் சமப்படவில்லை வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு பின்னர் பின்வரும் பிழைதவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி நிறுவனத்தின் *31/3/2019* இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறியலாபம் 46000 ஆகும்.

அ) ஆரம்பஇருப்பு ரூ 2000 ஆல் கூட்டிமதிப்பிடப்பட்டது.
ஆ) பேரேட்டில் காணப்பட்ட விளம்பரக் கணக்கு மீதி ரூ 2000 பரீட்சைமீதிக்கு எடுத்துவரவில்லை.
இ) 1.10.2018 இல் இடம்பெற்ற பொறிக்கொள்வனவு ரூ 40000 பொறிபழுதுபார்த்தல்கணக்கிற்கு வரவிடப்பட்டது. பொறிக்கு 20% தேய்விடப்படுகின்றது.
ஈ) உரிமையாளரின் சொந்த ஆயுட்காப்புறுதிக்கு செலுத்திய ரூ 3000 நிறுவன காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
உ) வங்கிக்கடனுக்கு செலுத்திய ரூ 12000 தவனைக்கட்டனம் முழுவதும் வங்கிக் கடன் கணக்கிற்கு வரவிடப்பட்டது எனினும் இதில் ரூ 2000 வட்டி உள்ளடங்கியுள்ளது.
ஊ) அறவிடமுடியாக்கடன் ரூ 4000 அறவிடமுடியாக் கடன் கணக்கிலும் கடன்பட்டோன் கணக்கிற்கும் வரவிடப்பட்டது.
எ) எதிர்மாற்றல் ரூ 5000 ஏடுகளில் எப்பதிவுக்கும் உட்படுத்தப்படவில்லை.
ஏ) கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது 1) பிழை தவறுகளை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்.**
**2) தொங்கல் கணக்கு**
**3) தேறியலாபச்சிராக்க கூற்று**

**(20 புள்ளிகள்)**

**வினா இல 05**
**அ)** சீலன் நிறுவனத்தின் 2020 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கூற்று வங்கி மீதி ரூபா 31200 வை வரவு மீதியாக காட்டியது. இம் மாத காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு இம் மீதியுடன் உடன்படவில்லை. காரணங்கள் வருமாறு.

1) மின்சாரத்திற்கு வரையப்பட்ட ரூபா 2100 காசோலை காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பிழையான பக்கத்தில் பதிவிடப்பட்டது.
2) வங்கிக்கூற்றின் செலவு நிரல் ரூ 2000 கூட்டிக்கூட்டப்பட்டது.
3) கொள்வனவுக்கு வரையப்பட்ட ரூபா 2300 காசோலை காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பிழையான பக்கத்தில் ரூபா 3200 எனபதியப்பட்டது.
4) ஜனவரி மாதத்தில் எழுதிக்கொடுக்கப்பட்ட ரூபா 5200, காசோலையும் மார்ச் மாதத்தில் இல் வரையப்பட்ட ரூபா 2800 காசோலைகள் 3 ஏப்பிரலில் இல் வங்கியில் கொடுத்து பணமாக்கப்பட்டது.
5) காசோலை மூலமான விற்பனை ரூபா 1500 காசுப்பெறுவனவு நாளேட்டில் ரூ 500 என பதிவிடப்பட்டது.
6) கடன்பட்டோரிடம் பெற்று வங்கியில் வைப்பிலிடப்பட்ட ரூபா 2900 காசோலை வங்கியால் ரூபா 300 செலவுடன் மறுக்கப்பட்டது இம் மறுத்தல் பற்றிய பதிவு காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் இடம்பெறவில்லை.
7) கொடுத்த கழிவு ரூபா 2100 கொடுத்த வாடகையாக கருதி காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டது.
8) மார்ச் மாதத்தில் வைப்பிலிடப்பட்ட ரூ 27500 காசோலைகளில் ரூ 21500 அம்மாத வங்கிக்கூற்றில் செலவிடப்பட்டது.

**தயாரிக்குக.**
**1) திருத்திய காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில்**
**2) மார்ச் மாத வங்கிக் கணக்கிணங்ககூற்று (வங்கிக்கூற்று மீதியல் இருந்து ஆரம்பிக்குக)**

**ஆ) சாரங்கன்** நிறுவனத்தின் 2020 ஜனவரி 01 மீதிகள்

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு ரூ 48000
கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூ 45000
காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூ 120000
சென்மதி பெறுமதிசேர் வரி (VAT) 18000

31.01.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான தகவ்கள் வருமாறு

05.01 காசு விற்பனை (VAT உட்பட) ரூ 44000
12.01 காசுக்கொள்வனவு (VAT உட்பட) 22000
15.01 பெற்றவாடகை ரூ 8000
18.01 சுகந்தனுக்கு விற்பனை (VAT உட்பட) 19800
22.01 சாந்தியிடம் கொள்வனவு (VAT உட்பட) 13200
25.01 ஆரம்ப கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய தொகை முழுவதும் ரூ3000 கழிவுதள்ளி பெறப்பட்டது.
28.01 ஆரம்ப கடன்கொடுநருக்கு செலுத்தவேண்டிய தொகை முழுவதும் ரூ2000 கழிவுதள்ளி செலுத்தப்பட்டது.
29.01 செலுத்தப்பட்ட வாடகை ரூ 4000
31.01 காசு விற்பனை (VAT உட்பட) ரூ 11000

கொள்வனவு , விற்பனை மீது 10% பெறுமதிசேர் வரி சேர்க்கப்பட்டுள்ளது

தயாரிக்குக.

1. காசுப் பெறுவனவு நாளேடு
2. காசுக்கொடுப்பனவு நாளேடு
3. பொதுப்பேரேட்டில் பிவரும் கணக்குகள்
   அ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு
   ஆ) கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு
   இ) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
   ஈ) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(20 புள்ளிகள்)